KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# Bahasa Tamil

## Sekolah Jenis Kebangsaan (Tamil)

## Dokumen Standard Kurikulum dan Pentaksiran

## TAHUN 1

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# Bahasa Tamil

**Sekolah Jenis Kebangsaan (Tamil)**

Dokumen Standard Kurikulum dan Pentaksiran

# TAHUN 1

Bahagian Pembangunan Kurikulum

2015

Terbitan 2015

© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4-8, Blok E9, Parcel E, Kompleks Pentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

ISBN: 978-967-420-107-4

**உள்ளடக்கம்**


ருக்குன் நெகாரா ........ v

தேசியக் கல்வித் தத்துவம் ........ vii

தேசியக் கலைத்திட்ட வரையறை ........ ix

அணிந்துரை ........ xi

முன்னுரை ........ 1

குறியிலக்கு ........ 2

நோக்கம் ........ 2

கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்ட அமைப்பு ........ 3

கலைத்திட்டக் குவிவு ........ 5

21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும் ........ 5

உயர்நிலைச் சிந்தனைத்திறன் ........ 7

விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறை ........ 8

விரவி வரும் கூறுகள் ........ 11

பள்ளி அளவிலான மதிப்பீடு ........ 14

உள்ளடக்க அமைப்பு ........ 17

- கேட்டல், பேச்சு ........ 19
- வாசிப்பு ........ 22
- எழுத்து ........ 25
- செய்யுளும் மொழியணியும் ........ 28
- இலக்கணம் ........ 29

ஒன்றாம் ஆண்டுக்கான செய்யுளும் மொழியணியும்........................................................................................................ 31
ஒன்றாம் ஆண்டுக்கான இலக்கணம்........................................................................................................................... 33
சொற்பட்டியல்........................................................................................................................................................ 34
பங்களித்தவர்கள் பெயர்ப்பட்டியல்.......................................................................................................................... 42

# RUKUN NEGARA

BAHAWASANYA Negara kita Malaysia mendukung cita-cita hendak:
Mencapai perpaduan yang lebih erat dalam kalangan seluruh masyarakatnya;
Memelihara satu cara hidup demokratik;
Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;
Menjamin satu cara yang liberal terhadap tradisi-tradisi
kebudayaannya yang kaya dan berbagai corak;
Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia, berikrar akan menumpukan seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

# ருக்குன் நெகாரா

உறுதியாக, நம் மலேசிய நாடானது பின்வருவனவற்றை அடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது:
அனைத்துச் சமூகங்களுக்கிடையில் அணுக்கமான ஒற்றுமையை ஏற்படுத்துதல்;
ஒரே ஜனநாயக வாழ்க்கை முறையைப் பேணுதல்;
நாட்டின் சுபிட்சத்தை நியாயமாகவும் நடுநிலையாகவும் பகிர்ந்து கொள்ளும்
சமுதாயத்தை உருவாக்குதல்;
பல்லின மக்களின் பல்வித பாரம்பரியமும் பண்பாடும் சுதந்திரமாகப்
பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்;
அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான
சமுதாயத்தை உருவாக்குதல்;

ஆகையால், மலேசிய மக்களாகிய நாங்கள், மேற்கூறிய இலட்சியங்களை அடைய பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் எங்களின் முழுச் சக்தியையும் முயற்சியையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவோம் என உறுதிப் பிரமாணம் செய்கிறோம்:

**இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்**
**பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்**
**அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்**
**சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்**
**நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

# FALSAFAH PENDIDIKAN KEBANGSAAN

“Pendidikan di Malaysia adalah suatu usaha berterusan ke arah lebih memperkembangkan potensi individu secara menyeluruh dan bersepadu untuk melahirkan insan yang seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani, berdasarkan kepercayaan dan kepatuhan kepada Tuhan. Usaha ini adalah bertujuan untuk melahirkan warganegara Malaysia yang berilmu pengetahuan, berketerampilan, berakhlak mulia, bertanggungjawab dan berkeupayaan mencapai kesejahteraan diri serta memberikan sumbangan terhadap keharmonian dan kemakmuran keluarga, masyarakat dan negara.”

Sumber: Akta Pendidikan 1996 (Akta 550)

# தேசியக் கல்வித் தத்துவம்

“மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயையும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.”

மூலம்: கல்விச் சட்டம் 1996 (சட்டம் 550)

# DEFINISI KURIKULUM KEBANGSAAN

**3. Kurikulum Kebangsaan**

(1) Kurikulum Kebangsaan ialah suatu program pendidikan yang termasuk kurikulum dan kegiatan kokurikulum yang merangkumi semua pengetahuan, kemahiran, norma, nilai, unsur kebudayaan dan kepercayaan untuk membantu perkembangan seseorang murid dengan sepenuhnya dari segi jasmani, rohani, mental dan emosi serta untuk menanam dan mempertingkatkan nilai moral yang diingini dan untuk menyampaikan pengetahuan.

Sumber: Peraturan-Peraturan Pendidikan (Kurikulum Kebangsaan) 1997
[PU(A)531/97]

# தேசியக் கலைத்திட்ட வரையறை

**3. தேசியக் கலைத்திட்டம்**

(1) தேசியக் கலைத்திட்டம் என்பது அறிவு, திறன், நெறிமுறை, பண்பு, கலாச்சாரக் கூறுகள், நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கலைத்திட்ட மற்றும் புறப்பாட நடவடிக்கைக்கான ஒரு கல்வித்திட்டமாகும். இத்திட்டம் மாணவர்கள் உடல், ஆன்மிகம், அறிவு, உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமையாகப் பெற்றிருக்க வகை செய்வதோடு மாணவர்களுக்கு வேண்டிய பண்புகளை விதைத்து அவற்றை மேம்படுத்தவும் அவர்கள் அறிவைப் பெறவும் வழிவகுக்கிறது.

மூலம்: கல்வி விதிமுறைகள் (தேசியக் கலைத்திட்டம்) 1997

[PU(A)531/97]

## KATA PENGANTAR

Kurikulum Standard Sekolah Rendah (KSSR) yang dilaksanakan secara berperingkat mulai tahun 2011 telah disemak semula bagi memenuhi dasar baharu di bawah Pelan Pembangunan Pendidikan Malaysia (PPPM) 2013-2025 supaya kualiti kurikulum yang dilaksanakan di sekolah rendah setanding dengan standard antarabangsa. Kurikulum berasaskan standard yang menjadi amalan antarabangsa telah dijelmakan dalam KSSR menerusi penggubalan Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP) untuk semua mata pelajaran yang mengandungi Standard Kandungan, Standard Pembelajaran dan Standard Prestasi.

Usaha memasukkan standard prestasi di dalam dokumen kurikulum telah mengubah landskap sejarah sejak Kurikulum Kebangsaan dilaksanakan di bawah Sistem Pendidikan Kebangsaan. Menerusinya murid dapat ditaksir secara berterusan untuk mengenal pasti tahap penguasaannya dalam sesuatu mata pelajaran, serta membolehkan guru membuat tindakan susulan bagi mempertingkatkan pencapaian murid.

DSKP yang dihasilkan telah menyepadukan enam tunjang Kerangka KSSR, mengintegrasikan pengetahuan, kemahiran dan nilai, serta memasukkan secara eksplisit Kemahiran Abad Ke-21 dan Kemahiran Berfikir Aras Tinggi (KBAT). Penyepaduan tersebut dilakukan untuk melahirkan insan seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani sebagaimana tuntutan Falsafah Pendidikan Kebangsaan.

Bagi menjayakan pelaksanaan KSSR, pengajaran dan pembelajaran guru perlu memberi penekanan kepada KBAT dengan memberi fokus kepada pendekatan Pembelajaran Berasaskan Inkuiri dan Pembelajaran Berasaskan Projek, supaya murid dapat menguasai kemahiran yang diperlukan dalam abad ke-21.

Kementerian Pendidikan Malaysia merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih kepada semua pihak yang terlibat dalam penggubalan KSSR. Semoga pelaksanaan KSSR akan mencapai hasrat dan matlamat Sistem Pendidikan Kebangsaan.

**Dr. SARIAH BINTI ABD. JALIL**
Pengarah
Bahagian Pembangunan Kurikulum

## முன்னுரை

கலைத்திட்ட மேம்பாட்டுப் பணியானது ஆக்கமிக்கதொரு தொடர்ச்சியான நடவடிக்கையாகும். அந்த வகையில் தொடக்கப்பள்ளிக்கான கே.பி.எஸ்.ஆர். கலைத்திட்டம் முதன் முதலாக 1983ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டு 1993ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டமாக மேம்படுத்தப்பட்டு, 2003ஆம் ஆண்டில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. மேலும், இக்கலைத்திட்டம் 2011ஆம் ஆண்டில் தற்காலத் தேவைக்கேற்பவும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளவும் தர அடிப்படையிலான ஆவணமாக உருவாக்கம் கண்டது. இதன் தொடர்ச்சியாக இத்தர ஆவணம் மதிப்பீட்டுக்கூறுகளையும் 21ஆம் நூற்றாண்டிற்கான திறன்களையும் உயர்நிலைச் சிந்தனைக்கூறுகளையும் உள்ளடக்கிய ஆவணமாகச் சீரமைக்கப்பட்டு, தர மற்றும் மதிப்பீட்டு ஆவணமாக உருமாற்றம் பெற்றது. இந்த ஆவணம் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் (2013–2025) வரையறுக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கேற்பவும் அமைந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே தமிழ்மொழிக் கலைத்திட்டமும் சீரமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மொழிக் கலைத்திட்டம்

சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்டம் தேசியக் கல்வித் தத்துவத்தில் வரையறுக்கப்பட்டுள்ள மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உடல், உள்ளம் ஆகியவற்றில் சமவளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் எண்ணங்களை நல்ல மொழியில் பண்பாக வெளிப்படுத்தவும் இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது.

தொடக்கப்பள்ளிக்கான சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தில் குறியிலக்கு, நோக்கம், கலைத்திட்டக் குவிவு, உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், தர அடைவு ஆகியவற்றோடு வரையறுக்கப்பட்ட இலக்கணமும், செய்யுளும் மொழியணியும் இடம்பெற்றுள்ளன. மேலும், இந்த ஆவணம் தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் மிகுந்த பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய வழிவகுக்கின்றது. எனவே, வரையறுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றை மாணவர்கள் அடைவதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும். அதே வேளையில் ஆசிரியர்கள் மாணவர்களின் மொழித்திறனை மேன்மேலும் வளர்ப்பதற்குப் புறப்பாட நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிடுதலும் வேண்டும்.

**குறியிலக்கு**

தமிழ்ப்பள்ளியின் சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவர்கள் கல்வியறிவு பெறுவதற்கும் அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சமூகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேவைப்படும் தமிழ்மொழி ஆற்றலைப் பெறுவதைக் குறியிலக்காகக் கொண்டுள்ளது. மேலும், பல்வகைப் பனுவல்களை வாசித்து உய்த்துணரவும் எண்ணங்களையும் உணர்வுகளையும் ஏரணச்சிந்தனையோடு வெளிப்படுத்தவும் இது வழிவகுக்கின்றது.

**நோக்கம்**

தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி, தொடக்கப்பள்ளி இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. சமூக உறவு கொள்வதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் சரியான மொழியைப் பயன்படுத்திப் பண்புடன் பேசுதல்.
2. பிறர் கூறும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொண்டு துலங்குதல்; நல்ல மொழியில் கருத்துகளைப் பண்புடன் வெளிப்படுத்துதல்.
3. பல்வேறு மூலங்களிலிருந்து திரட்டிய கருத்துகளையும் தகவல்களையும் சீர்தூக்கித் தெரிவுசெய்து வாய்மொழியாகவும் எழுத்து வடிவத்திலும் படைத்தல்.
4. வாய்மொழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து அதனை எழுத்து வடிவத்தில் படைத்தல்.
5. தன் கருத்துகளையும் ஏடல்களையும் வாய்மொழியாகவும் எழுத்து வடிவத்திலும் ஆக்ககரமாக விளைபயனுள்ள வகையில் படைத்தல்.
6. அறிவு வளர்ச்சி பெறவும் மனமகிழ்ச்சி அடையவும் வாசித்தல்.
7. பல்வேறு எழுத்துப் படிவங்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்; புரிந்து கொள்ளுதல்; உய்த்துணர்தல்.
8. எல்லாச் சூழல்களிலும் நன்னெறிப் பண்பு, இணக்கப்போக்கு, நாட்டுப்பற்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்பு கொள்ளுதல்.
9. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து உய்த்துணர்தல்; பயன்படுத்துதல்.
10. இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி, ஆண்டு ஒன்று இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:


1. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளுதல்; அதற்கேற்பத் துலங்குதல்.
2. எழுத்துகளை முறையாக ஒலித்தல்.
3. வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்டல்; வினாக்களுக்குப் பதில் கூறுதல்.
4. சூழலுக்கேற்பப் பண்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல்.
5. சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்; புரிந்து கொள்ளுதல்.
6. கையெழுத்தைச் சரியான வரிவடிவத்துடன் பிழையின்றி எழுதுதல்.
7. எளிய வாக்கியங்களைப் பிழையின்றி எழுதுதல்.
8. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து உய்த்துணர்தல்; பயன்படுத்துதல்.
9. இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

**கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்ட அமைப்பு**

சீரமைக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்டம் கீழ்க்கண்ட ஆறு உத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது:

(i) தொடர்பு
(ii) ஆன்மிகம், நடத்தை, பண்பு
(iii) மனிதவியல்
(iv) சுய சால்புடைமை
(v) உடல் வளர்ச்சியும் முருகுணர்ச்சியும்
(vi) அறிவியலும் தொழில்நுட்பமும்

ஒவ்வோர் உத்திரமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. அவற்றோடு ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவையும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்பு ஆன்மிகம், அறிவாற்றல், சுய சால்புடைமை, ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவற்றைக் கொண்ட மனித மூலதனத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது (விளக்கப்படம் 1).




**விளக்கப்படம் 1: கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்ட அமைப்பு**

**கலைத்திட்டக் குவிவு**

மாணவர்கள் தொடக்கப்பள்ளியின் முதலாம் படிநிலையில் (ஆண்டு 1-3) அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றைக் கைவரப்பெறுவதற்கு ஏதுவாக தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் வரையறுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் படிநிலையில் (ஆண்டு 4-6) மாணவர்கள் கைவரப்பெற்ற அடிப்படை மொழித்திறன்களைக் கொண்டு நல்ல மொழியைப் பயன்படுத்திப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் வாசிப்பின்வழி அறிவைப் பெறவும் இலக்கணப்பிழையின்றி நல்ல மொழியைப் பயன்படுத்தித் தரமான எழுத்துப் படிவங்களைப் படைக்கும் வகையிலும் உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் வரையறுக்கப்பட்டுள்ளன. இது சிறந்த முறையில் அமலாக்கம் பெறுவதற்குத் தரமான கற்றல்கற்பித்தலும் மகிழ்ச்சியாகக் கல்வி கற்கின்ற சூழலும் வலியுறுத்தப்படுகின்றது. மேலும், தமிழ்மொழியின் சிறப்பிற்கேற்பக் கற்றல்கற்பித்தலைச் செம்மைப்படுத்தும் நோக்கில் பொதுவறிவு, நற்பண்பு, குடிமை, சமுதாயப் பண்பாட்டு நெறிமுறைகள் ஆகியவையும் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

**21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும்**

தொடக்கப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழில் தர்மத்திலும் மேம்பாடடைந்த மாணவர்கள் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது வெற்றி பெற ஒவ்வொரு மாணவரும் கைவரப்பெற வேண்டிய திறனும் பண்பும் அட்டவணை 1இல் விவரிக்கப்பட்டுள்ள மாணவரின் சுயவிவரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: மாணவரின் சுயவிவரம்**

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **தாங்கும் வலிமை** | இடர்களையும் சவால்களையும் அறிவுடனும் நம்பிக்கையுடனும் சகிப்புத்தன்மையுடனும் பரிவுடனும் எதிர்கொண்டு வெல்லும் திறன் கொண்டிருப்பர். |
| **தொடர்புகொள்ளும் திறன்** | பல்வகை ஊடகங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திச் சிந்தனை, ஏடல், தகவல் ஆகியவற்றைத் தன்னம்பிக்கையுடனும் ஆக்ககரமாகவும் பேச்சு, எழுத்து மூலம் வெளிப்படுத்துவர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **சிந்தனையாளர்** | ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை உடையவர்; சிக்கல்களைக் களைந்து நியாயமான முடிவெடுப்பவர்; மாணவர் நிலையில் நின்று கற்றலைச் சிந்திப்பவர்; தனிமனிதர் மற்றும் சமுதாயத்தின் நோக்குநிலை, பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றைத் திறந்த மனத்தோடு பார்ப்பவர்; தன்னம்பிக்கையோடும் ஆக்கத்தோடும் புதியதைக் கற்றுக் கொள்பவர். |
| **குழுவாகச் செயல்படுதல்** | விளைபயன்மிக்க வகையிலும் சுமூகமாகவும் பிறருடன் ஒத்துழைப்பர்; குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பங்களிப்பை மதிப்பதோடு குழுவோடு சேர்ந்து பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்; ஒருங்கிணைந்து செயல்படுவதன்வழி பிறரிடைத்தொடர்புத் திறனைப் பெறுதல். இதன்வழி சிறந்த தலைவராகவும் குழு உறுப்பினராகவும் இருக்கும் தகுதியைப் பெற்றிருப்பர். |
| **அறியும் ஆர்வம்** | புதிய அணுகுமுறையையும் ஏடல்களையும் தெரிந்து கொள்வதற்கு ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்பவர். ஆய்வு மேற்கொள்ளத் தேவையான திறன்களைக் கற்பதோடு சுயமாகவும் கற்கக் கூடியவர். வாழ்நாள் கற்றல் அனுபவங்களைத் தொடர்ச்சியாக நுகர்ந்து மகிழ்வர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **கொள்கையுள்ளவர்** | தனிநபர் மற்றும் சமூகத்தின் தன்மானத்தை மதிப்பதோடு நாணயம், நேர்மை, சமத்துவம், நீதி ஆகிய பண்புகளையும் கொண்டிருப்பர். தங்களின் முடிவுகளுக்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்பர். |
| **தகவல் நிறைந்தவர்** | பல்வேறு துறைசார்ந்த அறிவினைப் பெற்று அதனை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொள்வர். உள்நாட்டு, அனைத்துலக விவகாரங்களைத் திறமையாகவும் விளைபயனுள்ள வகையிலும் ஆராய்வர். கிடைக்கப்பெற்ற தகவல்கள் தொடர்பான நன்னெறி /சட்டச் சிக்கல்களைப் புரிந்திருப்பர். |
| **அன்பானவர்/ பரிவுள்ளவர்** | பிறர் தேவையையும் உணர்வையும் புரிந்து கொண்டு மதிப்பும் பரிவும் இரக்கமும் காட்டுவர். சமுதாயச் சேவையில் தங்களை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்வர். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வர். |
| **நாட்டுப்பற்று** | நாட்டின் மீது அன்பையும் மரியாதையையும் ஆதரவையும் காட்டுவர். |

**உயர்நிலைச் சிந்தனைத்திறன்**

கற்றல்கற்பித்தலில் ஆசிரியர்கள் உயர்நிலைச் சிந்தனைத்திறனைச் சரியாகப் பொருள்பெயர்ப்புச் செய்து மாணவர்களின் சிந்தனையை முறைப்படுத்தும் வகையில் அது கலைத்திட்டத்தில் தெரிநிலையில் எழுதப்பட்டுள்ளது. அட்டவணை 2இல் உயர்நிலைச் சிந்தனைத்திறனின் நான்கு சிந்தனைப் படிநிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கான சிந்தனைப் படிநிலைகள்**

| சிந்தனைப் படிநிலைகள் | விளக்கம் |
|---|---|
| பயன்படுத்துதல் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுத்தாய்தல் | தகவலைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அவற்றுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடுதல் | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு பரிசீலனை செய்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்குதல் | ஆக்கப் புத்தாக்கத் தன்மையைக் கொண்ட பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை உருவாக்குதல். |

அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்து, மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றலே உயர்நிலைச் சிந்தனைத்திறனாகக் கருதப்படுகின்றது.

உயர்நிலைச் சிந்தனைத்திறன் ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, சீர்தூக்கிப் பார்த்தல், சிந்தனை வியூகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**ஆய்வுச் சிந்தனை** என்பது தக்கக் காரணங்களையும் சான்றுகளையும் கொண்டு அறிவார்ந்த நிலையில் ஏரணமாகச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்யும் ஆற்றலாகும்.

**ஆக்கச் சிந்தனை** என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு பாரம்பரிய முறையில் இல்லாமல் மாறுபட்ட கோணத்தில் மதிப்புயர்வுமிக்க புதிய ஒன்றனை உருவாக்கும் ஆற்றலாகும்.

**சீர்தூக்கிப் பார்த்தல்** என்பது ஏரணமான முறையில் பரிசீலனை செய்யவும் மதிப்பிடவும் கூடிய ஆற்றலாகும்.

**சிந்தனை வியூகம்** என்பது சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகையில் கட்டமைப்பினைக் கொண்ட தீர்க்கமான சிந்தனையாகும்.

சீர்தூக்கிப் பார்த்தல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், சிக்கலுக்குத் தீர்வுகாணுதல், செயல்திட்டம் ஆகிய நடவடிக்கைகள்வழி உயர்நிலைச் சிந்தனைத்திறனை வகுப்பறையில் கற்பிக்கலாம். சிந்தனைவரைவு, மனவோட்டவரைவு போன்ற சிந்தனைக்கருவிகளைப் பயன்படுத்தியும் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகள் வாயிலாகவும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனைத்திறனை வளர்க்கலாம்.

**விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறை**

அறிவையும் திறன்களையும் கைவரப் பெறுவதற்கும் நற்பண்புகளை உய்த்துணர்வதற்கும் கற்றல்கற்பித்தல் அணுகுமுறையானது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைதல் வேண்டும். விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல், மாணவர் மையமாக இருப்பதோடு சிறந்த நடவடிக்கைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், கற்றல்கற்பித்தல் அணுகுமுறை மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைதல் வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில் மாணவர்களின் முழுமையான ஈடுபாடும் முக்கியமாகக் கருதப்படுகிறது. சிறப்பான கற்றல்கற்பித்தலோடு ஆசிரியர் மாணவர்களுக்குத் தலைமைத்துவம், பொறுப்புணர்வு, தன்நிலையுணர்வு போன்ற கூறுகளை வலியுறுத்திக் குழுவில் செயல்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

கட்டுவியம், சூழலமைவுக் கற்றல், செயல்திட்ட அடிப்படையிலான கற்றல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், எதிர்காலவியல், சிக்கல் அடிப்படையிலான கற்றல் போன்றவை விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் அணுகுமுறைகளாகக் கருதப்படுகின்றன. இவை மாணவர்களின் புரிதலையும் கற்றலையும் மேம்படுத்த வழிகோலும். இந்த அணுகுமுறைகள் பற்றிய விளக்கம் பின்வருமாறு:

**கட்டுவியம்**

கட்டுவியம் என்பது மாணவர்கள் முன்னறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு தங்களின் சிந்தனை அல்லது கருத்துக்கோடலை உருவாக்கிக் கொள்ளும் கற்றல் அணுகுமுறையாகும். இந்தக் கற்றல் அணுகுமுறைவழி மாணவர்கள் தாங்கள் பெறுகின்ற தகவலையும் முன்னறிவையும் இணைத்துப் புதிய சிந்தனையைப் பெறுவர். இவ்வணுகுமுறையை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திப் பயன்பெற ஆசிரியர் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகளைக் கற்றல்கற்பித்தலில் கையாளுவது அவசியம்.

**சூழலமைவுக் கற்றல்**

சூழலமைவுக் கற்றல் என்பது தனிமனித, சமூக, பணியிட அனுபவத்தையும் பாடப்பொருளையும் தொடர்புபடுத்திக் கற்கும் அணுகுமுறையாகும். இவ்வணுகுமுறை, செயல் மற்றும் சிந்தனைப் பூர்வமான நடவடிக்கைகளின்வழி உறுதியான கற்றலுக்கு வழிவகுப்பதோடு மாணவர்கள் தங்களின் முன்னறிவைப் பல்வேறு சூழலில் பயன்படுத்தவும் துணைபுரிகின்றது.

**செயல்திட்ட அடிப்படையிலான கற்றல்**

செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் என்பது நீண்ட கால இடுபணி நடவடிக்கைகளின்வழி அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைக் கைவரப்பெறச் செய்யும் ஓர் அணுகுமுறையாகும். கொடுக்கப்படும் இடுபணியானது பல்வேறு துறைசார்ந்த நடப்பு விவகாரங்கள், வாழ்க்கை நடைமுறைகள் ஆகியவற்றோடு மாணவரை மையமாகக் கொண்டதாகவும் அமைதல் வேண்டும். இவ்வணுகுமுறை, மாணவர்கள் சிக்கலை ஆராயவும் தகவல் திரட்டித் தீர்மானம் எடுக்கவும் புரிதலை மேம்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.

**ஆய்ந்தறிதல்வழி கற்றல்**

ஆய்ந்தறிதல்வழி கற்றல் என்பது கேட்கப்படும் கேள்விக்கான விடைகளை ஆய்வுசெய்து கண்டறியும் அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறை ஆய்வு செய்தல், விசாரணை செய்தல், தரவுகளைச் சேகரித்தல், முடிவெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. இதன்வழி மாணவர்கள் சிக்கல் களையவும் ஆய்வையொட்டிய சிந்தனைமீட்சி செய்யவும் சிக்கல் தொடர்பான கருத்துப் பரிமாற்றம் செய்யவும் தேவைப்படுகின்ற திறன்களைப் பெறுவர்.

**எதிர்காலவியல்**

எதிர்காலவியல் என்பது மாணவர்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கும் வாய்ப்பு, ஏற்படப்போகும் விவகாரம், சிக்கல் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வைக் கொடுக்கும் ஒரு கற்றல்முறையாகும். இந்தக் கற்றல்முறை மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட திறன்களை அளிக்கின்றது:

- எதிர்காலத்தை அனுமானித்தல்.
- எதிர்கால விளைவுகளை ஊகித்தறிதல்.
- எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளுதல்.

**சிக்கல் அடிப்படையிலான கற்றல்**

சிக்கல் அடிப்படையிலான கற்றல் என்பது கொடுக்கப்படும் சிக்கலுக்கு மாணவர்கள் சுயமாகத் தீர்வுகாணும் கற்றல் அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையில் மாணவர்கள் சிக்கலைப் புரிந்து கொள்ளவும் அதற்கான தீர்வினைக் கண்டறிந்து செயல்படுத்தவும் தெரிந்து கொள்வர். மாணவர்கள் ஆக்ககரமாகவும் ஆய்வுச் சிந்தனையோடும் செயல்பட இந்த அணுகுமுறை உதவுகிறது.

**பயிற்றி அணுகுமுறை**

பயிற்றி அணுகுமுறையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் மற்றும் செய்யுள், மொழியணி, இலக்கணம் ஆகியவை தனித்துக் கற்றுத் தரப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மொழித்திறனையும் மாணவர்கள் சிறந்த முறையில் கைவரப்பெற வேண்டும் என்பதற்காக இது பரிந்துரைக்கப்படுகிறது. செய்யுள், மொழியணி, இலக்கணம் ஆகியவை மாணவரின் மொழியாற்றலை மேம்படுத்துவதற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.

**கருப்பொருள் அடிப்படையிலான கற்றல்**

கருப்பொருள் அடிப்படையிலான கற்றலில் ஆசிரியர் ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படைத் திறன்களுக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் வேண்டும். தமிழ்ப்பள்ளிக்கான பரிந்துரைக்கப்பட்ட கருப்பொருள் பின்வருமாறு:

- மொழி
- விளையாட்டு
- சுகாதாரம்
- உணவு
- போக்குவரத்து
- பாதுகாப்பு

- கல்வி
- பண்பாடு
- குடியியல்
- கலை
- பொருளாதாரம்
- அனுபவங்கள்
- வணிகவியல்
- போதைப்பொருள்
- சமூகம்
- அறிவியல்
- குடும்பம்
- சுற்றுச்சூழல்
- சமயம்
- நன்னெறி
- வரலாறு
- இலக்கியம்
- மனமகிழ் நடவடிக்கைகள்
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

**விரவி வரும் கூறுகள்**

விரவி வரும் கூறுகள் உள்ளடக்கத் தரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்துக் கற்றல்கற்பித்தலில் கூடுதலாக இணைக்கப்பட வேண்டிய கூறுகளாகும். இவை, மாணவர்களின் திறனையும் சால்பையும் திடப்படுத்துகின்றன. தற்கால, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் சமன்நிலையிலான மனித மூலதனத்தை உருவாக்குவதற்காகவே கற்றல்கற்பித்தலில் கீழ்க்கண்ட விரவி வரும் கூறுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

1. **மொழி**

   - எல்லாப் பாடங்களிலும் மொழி சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
   - மாணவர்கள் தங்களின் ஏடல்களை விளைபயன்மிக்க வகையில் நல்ல மொழியைப் பயன்படுத்தி வெளிப்படுத்த உதவும் வகையில் ஒவ்வொரு பாட கற்றல்கற்பித்தலின் போதும் ஆசிரியர் மாணவர்களின் உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, இலக்கணம், கலைச்சொல் பயன்பாடு, மொழிநடை ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**2. சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்**

- அனைத்துப் பாட கற்றல்கற்பித்தலின் போதும் சுற்றுச்சூழலை நேசித்தல், பராமரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் விழிப்புணர்வை மாணவர்களின் மனத்தில் பதியவைக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல், உலகளாவிய நிலைத்தன்மை ஆகியன பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மாணவரிடையே சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பண்பை வளர்க்க உதவும்.

**3. நன்னெறிப் பண்பு**

- மாணவர்கள் நற்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்கும் பொருட்டு அனைத்துப் பாடங்களிலும் நன்னெறிப் பண்பு வலியுறுத்தப்பட வேண்டும்.
- தேசிய மற்றும் உலகளாவிய நிலையிலான ஆன்மிகம், மனிதவியல், குடியியல் ஆகிய நன்னெறிப் பண்பு அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கூறுகளாகும்.

**4. அறிவியலும் தொழில்நுட்பமும்**

- மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்ப்பதன்வழி அவர்களின் அறிவியல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த இயலும்.
- கற்றல்கற்பித்தலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், விளைபயன்மிக்க கற்றலை உருவாக்க உதவும்.
- கற்றல்கற்பித்தலில் அறிவியல், தொழில்நுட்ப இணைப்பு கீழ்க்கண்ட நான்கு கூறுகளை உள்ளடக்கியுள்ளது.
  - (i) அறிவியல், தொழில்நுட்ப அறிவு (அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கருத்து, கோட்பாடு, கருத்துக்கோடல்)
  - (ii) அறிவியல் திறன் (அறிவியல் சிந்தனையும் கையாளும் திறனும்)
  - (iii) அறிவியல் பண்பு (துல்லியம், நேர்மை, பாதுகாப்பு)
  - (iv) கற்றல்கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடு

**5. நாட்டுப்பற்று**

- எல்லாப் பாடங்கள், புறப்பாட நடவடிக்கைகள், சமூக சேவைகள் ஆகியவற்றின்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்க இயலும்.
- நாட்டை நேசிக்கும் மலேசியக் குடிமகன் என்ற பெருமிதம் கொண்ட மாணவர்களை உருவாக்க இயலும்.

**6. ஆக்கமும் புத்தாக்கமும்**

- ஆக்கம் என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு ஏடலைச் சேகரித்துப் பகுத்தாய்ந்து புதிதான அல்லது அசலான

ஒன்றை உருவாக்குவதாகும்.

- ஆக்கச் சிந்தனையின்வழி ஏடலை மாற்றம் செய்து சீர்செய்து அதனை அமலாக்கப்படுத்துவதே புத்தாக்கம் ஆகும்.
- ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. இவை 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் மனித மூலதனத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன.
- ஆக்கப் புத்தாக்கக் கூறுகள் கற்றல்கற்பித்தலில் முறையாக இணைக்கப்படுதல் வேண்டும்.

## 7. தொழில்முனைப்பு

- தொழில்முனைவருக்கு இருக்க வேண்டிய தன்மைகளை மாணவர்களிடையே உருவாக்குவதையும் அவற்றை வாழ்வியல் பண்பாடாக வழக்கப்படுத்துவதையும் தொழில்முனைப்புக் கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுறுசுறுப்பு, நேர்மை, நம்பகத்தன்மை, பொறுப்புணர்ச்சி, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை போன்றவற்றைக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில் புகுத்துவதன்வழி தொழில்முனைப்புத் திறனை மாணவர்களிடையே வளர்க்க இயலும்.

## 8. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்றல்கற்பித்தலில் இணைப்பதன்வழி மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அறிவையும் பயன்பாட்டினையும் அறிவதோடு அவற்றைத் திடப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மாணவர்களை ஆக்கச் சிந்தனை உடையவர்களாக உருவாக்குவதோடு கற்றல்கற்பித்தல் கவர்ச்சிகரமானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைய வழிவகுக்கும். இதன்வழி, மாணவர்களின் கற்றல் தரம் உயரும்.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூறுகள் கற்றல்கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமானதாக அமைவதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். இது, மாணவர்கள் பாடத்தின் உள்ளடக்கத்தைச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.

**பள்ளி அளவிலான மதிப்பீடு**

கற்றல்கற்பித்தலில் பள்ளி அளவிலான மதிப்பீடு முக்கியக் கூறாகக் கருதப்படுகிறது. மதிப்பீட்டின்வழி மாணவர்களின் உண்மையான அடைவுநிலை பற்றிய தகவலை ஆசிரியர் பெற்று, கற்றல்கற்பித்தலை மேம்படுத்திக் கொள்ள முடியும். பள்ளி அளவிலான மதிப்பீட்டில் திட்டமிடுதல், வினா மற்றும் மதிப்பீட்டுக் கருவி உருவாக்குதல், அவற்றை நிர்வகித்தல், புள்ளி வழங்குதல், முடிவுகளைப் பதிவு செய்தல், அறிக்கை தயாரித்தல் ஆகிய அனைத்து முக்கியப் பணிகளும் செய்யப்பட வேண்டும்.

பள்ளி அளவிலான மதிப்பீடு சமன்நிலை மாந்தர் உருவாக்கத்தில் ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் பங்களிப்பை நிர்ணயம் செய்வதில் முக்கியப் பங்காற்றுகிறது. எனவே, இப்பள்ளி அளவிலான மதிப்பீட்டில் ஆசிரியரும் பள்ளி நிர்வாகமும் முழுமையான ஈடுபாட்டையும் தெளிவான இலக்கையும் கொண்டு மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதில் தொடர்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**பள்ளி அளவிலான மதிப்பீட்டின் தன்மைகள்:**

- முழுமையானது - அறிவு, திறன், பண்பு ஆகியவற்றின் அடைவுநிலையை முழுமையாகத் தரவல்லது.
- தொடர்ச்சியானது - கற்றல்கற்பித்தலுடன் இணைந்து செல்லக் கூடிய ஒரு தொடர்நடவடிக்கையாகும்.
- நெகிழ்வுத் தன்மையானது - மாணவர்களின் ஆர்வத்திற்கும் தயார்நிலைக்கும் ஏற்பப் பல்வகை அணுகுமுறையிலானது.
- தர அடைவைப் பிரதிபலிப்பது - கற்றல் தரத்திற்கேற்ப உருவாக்கப்பட்ட தர அடைவின் பிரதிபலிப்பாகும்

**அடைவுநிலைக்கான விளக்கம்**

மாணவர்கள் தாங்கள் கற்ற கற்றல் தரத்தை எந்த நிலையில் கைவரப்பெற்றுள்ளனர் என்பதனைக் காட்டுவது அடைவுநிலையாகும். கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களின் கற்றல் தரங்களுக்கான அடைவுநிலை விவரிப்பு அந்தந்த மொழித்திறனின் கற்றல் தரங்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அடைவுநிலையைப் பயன்படுத்தி மாணவர்களின் குறைநிறைகளை அறிந்து அவற்றிற்கேற்பக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தி மாணவர்களின் அடைவுநிலையை மேலும் உயர்த்துதல் ஆசிரியர்களின் கடமையாகும். மாணவர்களின் ஒவ்வொரு மொழித்திறனின் அடைவுநிலைக்கேற்பத் தமிழ்மொழிக்கான ஒட்டுமொத்த அடைவுநிலையை அட்டவணை 3இல் உள்ள விவரிப்பின்வழி ஆசிரியர் தொழிற்றகைமை அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**அட்டவணை 3: தமிழ்மொழிக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை விவரிப்பு**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1 **மிகக் குறைவு** | மாணவர்க்கு **மிகக் குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு அதிகமான வழிகாட்டலும் பயிற்சியும் தேவைப்படுகிறது. |
| 2 **குறைவு** | மாணவர்க்குக் **குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்குச் சிறிது வழிகாட்டலும் பயிற்சியும் தேவைப்படுகிறது. |
| 3 **திருப்தி** | மாணவர்க்கு **ஓரளவு** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்குச் சிந்திக்கும் திறனோடு எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. |
| 4 **நன்று** | மாணவர்க்கு **நல்ல** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வுச் சிந்தனையோடு எண்ணங்களையும் கருத்துகளையும் ஏரணச் சிந்தனையோடு வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. மாணவர்க்கு ஓரளவு சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |
| 5 **சிறப்பு** | மாணவர்க்குச் **சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வு, ஆக்கச் சிந்தனையோடு ஏரணமான எண்ணங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் விளக்கமாகவும் விளைபயன்மிக்க வகையில் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. மாணவர்க்குச் சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |
| 6 **மிகச் சிறப்பு** | மாணவர்க்கு **மிகச் சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மாணவர்க்கு ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு ஏரணமான எண்ணங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் விளக்கமாகவும் நிரல்படவும் விளைபயன்மிக்க வகையில் தயக்கமில்லாமல் கவரும் வகையில் வெளிப்படுத்தும் திறனும் உள்ளது. பிற மாணவர்களுக்கு உதாரணமாக இருப்பதோடு சுயமாகக் கற்கும் திறனும் உள்ளது. |

**உள்ளடக்க அமைப்பு**

தொடக்கப்பள்ளிக்கான சீரமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தரத்தையும் கற்றல் தரத்தையும் தர அடைவையும் வலியுறுத்துகின்றது. இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கணக் கூறுகள், செய்யுள், மொழியணி, சொற்களஞ்சியம் ஆகியவையும் இணைக்கப்பட்டுள்ளன.

**உள்ளடக்கத் தரம்**

வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும்.

**கற்றல் தரம்**

ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும்.

**தர அடைவு**

தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும்.

**கேட்டல் திறன்**

கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடு அறிந்து கொண்டும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்து கொண்டும் துலங்குவர்.

**பேச்சுத் திறன்**

பேச்சுத் திறனில் மாணவர்கள் நல்ல மொழியில் உரையாடிப் பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதோடு, சிந்தித்துத் தங்களின் கருத்துகள், எண்ணங்கள், தகவல்கள் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் தெளிவுடனும் பிறருக்குக் கூறுவர்.

**வாசிப்புத் திறன்**

வாசிப்புத் திறனில் மாணவர்கள் சரளமாகவும் சரியான உச்சரிப்புடனும் உரக்க வாசிப்பர். மேலும், பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஆய்வுச் சிந்தனையுடன் வாசித்துக் கருத்துணர்வர்.

**எழுத்துத் திறன்**

எழுத்துத் திறனில் மாணவர்கள் எழுத்துப்பிழையின்றி, இலக்கண அமைதியுடன் நல்ல கையெழுத்தில் எழுதுவர். மேலும், சிந்தனைத்திறன்களைப் பயன்படுத்தித் தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் கற்பனை வளத்துடன் படைப்பர்.

**செய்யுளும் மொழியணியும்**

செய்யுள், மொழியணி ஆகியவற்றின்வழி மாணவர்கள் வரையறுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகளை அறிந்து உய்த்துணர்வதோடு வளமான மொழியாற்றலுடன் படைப்புகளை உருவாக்குவர்.

**இலக்கணம்**

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் இலக்கண அறிவைப் பெற்று அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவர்.

**சொற்களஞ்சியம்**

அருஞ்சொற்களும் கலைச்சொற்களும் இந்தச் சொற்களஞ்சியத்தில் அடங்கும். நாட்டின் மேம்பாட்டிற்கேற்பவும் கல்வி, மொழி வளர்ச்சிக்கேற்பவும் தொடக்கப்பள்ளியில் சொற்களஞ்சியம் பெருக்கப்பட வேண்டும்.

## 1.0 கேட்டல், பேச்சு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 1.1 பல்வகை ஒலிகளை அறிவர். | 1.1.1 பிராணிகள் எழுப்பும் ஒலிகளை அறிவர். |
| | 1.1.2 இயற்கை ஒலிகளை அறிவர். |
| | 1.1.3 செயற்கை ஒலிகளை அறிவர். |
| | 1.1.4 இசைக் கருவிகளின் ஒலிகளை அறிவர். |
| 1.2 எழுத்துகளை ஒலிப்பர். | 1.2.1 உயிரெழுத்துகளையும் ஆய்த எழுத்தையும் ஒலிப்பர். |
| | 1.2.2 மெய்யெழுத்துகளை ஒலிப்பர். |
| | 1.2.3 வல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர். |
| | 1.2.4 மெல்லின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர். |
| | 1.2.5 இடையின உயிர்மெய் எழுத்துகளை ஒலிப்பர். |
| | 1.2.6 குறில், நெடில் எழுத்துகளை ஒலிப்பர். |
| | 1.2.7 கிரந்த எழுத்துகளை ஒலிப்பர். |
| 1.3 செவிமடுத்தவற்றைக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | 1.3.1 செவிமடுத்த கட்டளையையும் வேண்டுகோளையும் நிறைவேற்றுவர். |
| 1.4 செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர். | 1.4.1 செவிமடுத்த பாடலிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 1.5 கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர். | 1.5.1 யார், எது, என்ன எனும் கேள்விகளுக்கேற்பப் பதில் கூறுவர். |
| 1.6 பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர். | 1.6.1 யார், எது, என்ன எனும் வினாச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திக் கேள்விகள் கேட்பர். |
| 1.7 பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். | 1.7.1 மரியாதைச் சொற்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.<br>1.7.2 உறவுப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர்.<br>1.7.3 அறுசுவைப் பெயர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுவர். |
| 1.8 கதை கூறுவர். | 1.8.1 தனிப்படத்தைத் துணையாகக் கொண்டு கதை கூறுவர். |

**கேட்டல், பேச்சுக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே எழுத்துகளை ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பத் துலங்கவும் கருத்துகளைக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேசவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே எழுத்துகளை ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பத் துலங்கவும் கருத்துகளைக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேசவும் இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, எழுத்துகளை ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பத் துலங்கவும் கருத்துகளைக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேசவும் இயலும். |
| 4<br>நன்று | எழுத்துகளைச் சரியான உச்சரிப்புடன் ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பச் சரியாகத் துலங்கவும் கருத்துகளைத் தெளிவாகக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திச் சரளமாகப் பேசவும் இயலும். |
| 5<br>சிறப்பு | எழுத்துகளைச் சரியான உச்சரிப்புடன் தெளிவாக ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பச் சரியாகத் துலங்கவும் கருத்துகளை நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றித் தெளிவாகக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிச் சரளமாகப் பேசவும் இயலும். |
| 6<br>மிகச் சிறப்பு | எழுத்துகளைச் சரியான உச்சரிப்புடன் தயக்கமில்லாமல் தெளிவாக ஒலிக்கவும் செவிமடுத்தவற்றைக் கிரகித்து அதற்கேற்பச் சரியாகத் துலங்கவும் கருத்துகளை நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றித் தயக்கமில்லாமல் தெளிவாகக் கூறவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றி ஏற்ற மொழியணிகளைப் பயன்படுத்தித் தயக்கமில்லாமல் சரளமாகப் பேசவும் இயலும். |

## 2.0 வாசிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 2.1 வடிவம், அளவு, நிறம் ஆகியவற்றை அறிவர். | மாணவர்கள்:<br>2.1.1 ஒரே மாதிரியானவற்றைத் தெரிவு செய்வர்.<br>2.1.2 இனம் சேராதவற்றை அடையாளம் காண்பர்.<br>2.1.3 இனத்திற்கேற்ப வகைப்படுத்துவர்.<br>2.1.4 ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளம் காண்பர். |
| 2.2 சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.2.1 உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.2 மெய்யெழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.3 வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.4 மெல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.5 இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.6 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.7 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.8 கிரந்த எழுத்துகளை வழக்கிலுள்ள சொல், சொற்றொடர்வழி அறிந்து சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.9 க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.10 ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.11 ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | 2.2.12 இரண்டு சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.13 மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.14 பத்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.3 சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர். | 2.3.1 சிறுவர் பாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர். |
| 2.4 வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.4.1 சொல்லை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br>2.4.2 சொற்றொடரை வாசித்துப் புரிந்து கொள்வர். |

**வாசிப்புக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் தடுமாற்றத்துடனும் மட்டுமே சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் இயலும். |
| 3<br>திருப்தி | சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் ஓரளவு இயலும். |
| 4<br>நன்று | சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் சரளமாக வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் இயலும். |
| 5<br>சிறப்பு | சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் தயக்கமில்லாமல் சரளமாக வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் இயலும். |
| 6<br>மிகச் சிறப்பு | சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் தயக்கமில்லாமல் கவரும் வகையில் சரளமாக வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் இயலும். |

## 3.0 எழுத்து

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 3.1 எழுதுவதற்கான ஆயத்த நிலை பயிற்சிகள் செய்வர். | 3.1.1 கை இயக்கப் பயிற்சிகள் செய்வர். |
| | 3.1.2 கண் நகர் பயிற்சிகள் செய்வர். |
| | 3.1.3 கண்களையும் கைகளையும் ஒருங்கிணைக்கும் பயிற்சிகள் செய்வர். |
| | 3.1.4 கொம்பு, வளைவு, சுழி, விலங்கு உள்ளடங்கிய தமிழ் எழுத்துகளுக்கேற்ற கோலங்கள் வரைவர். |
| 3.2 நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.2.1 கொம்பு, வளைவு, சுழி, விலங்கு ஆகியவற்றைச் சரியான அளவுடன் எழுதுவர். |
| | 3.2.2 சரியான அளவு, இடைவெளி, வரிவடிவம் ஆகியவற்றுடன் தூய்மையாக எழுதுவர். |
| 3.3 சொல், சொற்றொடர்களை உருவாக்கி எழுதுவர். | 3.3.1 ஓரெழுத்துச் சொற்களை எழுதுவர். |
| | 3.3.2 ஈரெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.3 மூவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.4 கொடுக்கப்படும் எழுத்தைத் தொடக்கமாகக் கொண்டு சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.5 கொடுக்கப்படும் எழுத்தில் முடியும் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.6 வல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.7 மெல்லின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.8 இடையின உயிர்மெய் எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.9 குற்றெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.10 நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| | 3.3.11 கிரந்த எழுத்தைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
| --- | --- |
| | 3.3.12 க்க, ச்ச, ட்ட, த்த, ப்ப, ற்ற ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.3.13 ண்ண, ன்ன, ல்ல, ள்ள ஆகிய இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுவர்.<br>3.3.14 ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற ஆகிய இனவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுதுவர். |
| 3.4 வாக்கியம் அமைப்பர். | 3.4.1 சொல்லைக் கொண்டு வாக்கியம் அமைப்பர்.<br>3.4.2 சொற்றொடரைக் கொண்டு வாக்கியம் அமைப்பர். |

**எழுத்துக்கான தர அடைவு**

| தர அடைவு | |
|---|---|
| **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 1<br>மிகக் குறைவு | மிகக் குறைந்த அளவிலும் அதிக எழுத்துப்பிழையுடனும் மட்டுமே சொற்களை உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும் இயலும். மிகக் குறைந்த அளவிலும் அதிக எழுத்துப்பிழையுடனும் மட்டுமே கையெழுத்தை வரிவடிவத்துடனும் தூய்மையாகவும் எழுத இயலும். |
| 2<br>குறைவு | குறைந்த அளவிலும் எழுத்துப்பிழையுடனும் மட்டுமே சொற்களை உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும் இயலும். குறைந்த அளவிலும் எழுத்துப்பிழையுடனும் மட்டுமே கையெழுத்தை வரிவடிவத்துடனும் தூய்மையாகவும் எழுத இயலும். |
| 3<br>திருப்தி | ஓரளவு, சொற்களை உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும் கையெழுத்தைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் இயலும். |
| 4<br>நன்று | எழுத்துப்பிழையின்றிச் சொற்களை உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு இலக்கணப்பிழையின்றி வாக்கியம் அமைக்கவும் கையெழுத்தைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் இயலும். |
| 5<br>சிறப்பு | எழுத்துப்பிழையின்றிச் சொற்களைப் பொருளுணர்ந்து உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் வாக்கியம் அமைக்கவும் கையெழுத்தைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் இயலும். |
| 6<br>மிகச் சிறப்பு | எழுத்துப்பிழையின்றிச் சொற்களைப் பொருளுணர்ந்து உருவாக்கவும் சொல், சொற்றொடர் ஆகியவற்றைக் கொண்டு இலக்கணப்பிழையின்றியும் எழுத்துப்பிழையின்றியும் ஏற்ற மொழியணியைப் பயன்படுத்திச் சிறந்த வாக்கியம் அமைக்கவும் கையெழுத்தைச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் இயலும். |

## 4.0 செய்யுளும் மொழியணியும்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| | மாணவர்கள்: |
| 4.1 ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.1.1 ஒன்றாம் ஆண்டுக்கான ஆத்திசூடியையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.2.1 ஒன்றாம் ஆண்டுக்கான கொன்றை வேந்தனையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.3.1 ஒன்றாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.4.1 ஒன்றாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.5 இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.5.1 ஒன்றாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.6.1 ஒன்றாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர். |
| 4.7 பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 4.7.1 ஒன்றாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுவர். |

**குறிப்பு:**

செய்யுள், மொழியணிக்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், செய்யுள், மொழியணிக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 5.1 எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | மாணவர்கள்:<br>5.1.1 உயிர்க்குறில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.2 உயிர்நெடில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.3 வல்லின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.4 மெல்லின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.5 இடையின மெய்யெழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.6 உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.7 உயிர்மெய் நெடில் எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.8 ஆய்த எழுத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.1.9 தமிழ் நெடுங்கணக்கை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.2.1 கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.1 உயர்திணை, அஃறிணை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.3.2 ஆண்பால், பெண்பால், பலர்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.3.3 ஒருமை பன்மையில் ‘கள்’ விகுதி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் |
|---|---|
| 5.4 வாக்கிய வகைகளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 5.4.1 கட்டளை வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.<br>5.4.2 வேண்டுகோள் வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.<br>5.4.3 செய்தி வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர்.<br>5.4.4 வினா வாக்கியத்தை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 5.5 நிறுத்தக்குறிகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.5.1 முற்றுப்புள்ளி, வினாக்குறி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

**குறிப்பு:**

இலக்கணத்திற்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், இலக்கணத்திற்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும்.

# செய்யுளும் மொழியணியும்

## செய்யுள்

### ஆத்திசூடி - ஔவையார்

1 அறஞ்செய விரும்பு
2 ஆறுவது சினம்
3 இயல்வது கரவேல்
4 ஈவது விலக்கேல்
5 உடையது விளம்பேல்
6 ஊக்கமது கைவிடேல்
7 எண்ணெழுத் திகழேல்
8 ஏற்ப திகழ்ச்சி
9 ஐய மிட்டுண்
10 ஒப்புர வொழுகு
11 ஓதுவ தொழியேல்
12 ஔவியம் பேசேல்

### கொன்றை வேந்தன் - ஔவையார்

1 அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2 ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3 ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
4 எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
5 ஏவா மக்கள் மூவா மருந்து
6 ஐயம் புகினும் செய்வன செய்
7 குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

### திருக்குறள் - திருவள்ளுவர்

1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

2 இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)

3 கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

**மொழியணி**

**இணைமொழி**

1 அங்கும் இங்கும்
2 ஆடல் பாடல்
3 எலும்பும் தோலும்

**இரட்டைக்கிளவி**

1 குடுகுடு
2 திருதிரு
3 தரதர

**மரபுத்தொடர்**

1 கண்ணும் கருத்தும்
2 ஒற்றைக் காலில் நிற்றல்
3 செவி சாய்த்தல்
4 நாக்கு நீளுதல்

**பழமொழி**

1 இளங்கன்று பயம் அறியாது
2 இளமைக் கல்வி சிலையில் எழுத்து
3 முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்
4 அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

# இலக்கணம்

1. **எழுத்திலக்கணம்**
    - உயிரெழுத்துகள்
    - மெய்யெழுத்துகள்
    - உயிர்மெய் எழுத்துகள்
    - ஆய்த எழுத்து
    - தமிழ் நெடுங்கணக்கு

2. **கிரந்த எழுத்துகள்**
    - பயன்பாட்டில் உள்ள கிரந்த எழுத்துகள்

3. **சொல்லிலக்கணம்**
    - திணை - உயர்திணை, அஃறிணை
    - பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால்
    - எண் - ஒருமை பன்மையில் 'கள்' விகுதி

4. **வாக்கிய வகைகள்**
    - கட்டளை வாக்கியம்
    - வேண்டுகோள் வாக்கியம்
    - செய்தி வாக்கியம்
    - வினா வாக்கியம்

5. **நிறுத்தக்குறிகள்**
    - முற்றுப்புள்ளி, வினாக்குறி

## சொற்பட்டியல்

**அ**

அழி
அழு
அரை
அறை
அலை
அணை
அங்கு
அம்பு
அடம்
அரசி
அரிசி
அரம்
அம்மி
அவர்
அவள்
அவன்
அன்பு
அலகு
அப்பா
அம்மா
அணில்
அத்தை
அட்டை
அண்ணி
அச்சம்
அடுப்பு
அரசன்
அகவும்
அனுமதி
அலமாரி
அண்ணன்
அக்காள்
அதிகாரி
அன்னாசி
அழிப்பான்
அளவுகோல்
அணிவகுப்பு
அலங்காரம்
அலங்கரிப்பு

**ஆ**

ஆடி
ஆடு
ஆறு
ஆவி
ஆணி
ஆரம்
ஆசை
ஆடை
ஆமை
ஆழம்
ஆடல்
ஆந்தை
ஆபத்து
ஆட்டம்
ஆப்பிள்
ஆரஞ்சு
ஆரம்பம்
ஆலமரம்
ஆசிரியர்

**இ**

இடி
இடு
இரு
இழை
இங்கு
இசை
இரை
இலை
இவை
இணை
இடம்
இதழ்
இரவு
இவர்
இவள்
இவன்
இறகு
இஞ்சி
இன்று
இறால்
இட்டலி
இரண்டு
இல்லம்
இறங்கு
இனிப்பு
இறைச்சி
இறைவன்

**ஈ**

ஈ
ஈரம்
ஈட்டி
ஈசல்
ஈசன்
ஈயம்

**உ**

உளி
உண்
உரை
உடை
உரல்
உதடு
உப்பு
உதவி
உடல்
உணவு
உலகம்
உடும்பு
உறுமும்
உள்ளூர்
உளுந்து
உறவினர்
உலக்கை
உருண்டை
உள்ளங்கை
உரையாடல்

**ஊ**

ஊர்
ஊசி
ஊதி
ஊதா
ஊமை
ஊதல்
ஊற்று
ஊஞ்சல்
ஊறுகாய்

**எ**

எடு
எரி
எண்
எடை
எட்டு
எதிரி
எங்கு
எச்சில்
எருமை
எழுதுகோல்

**ஏ**

ஏன்
ஏறு
ஏடு
ஏழு
ஏணி
ஏற்று
ஏப்பம்
ஏற்றம்

**ஐ**

ஐயா
ஐயர்

ஐந்து
ஐப்பசி
ஐம்பது

**ஒ**

ஒரு
ஒலி
ஒளி
ஒட்டு
ஒன்று
ஒன்பது
ஒட்டகம்

**ஓ**

ஓர்
ஓடு
ஓசை
ஓடை
ஓலை
ஓமம்
ஓரம்
ஓட்டு
ஓநாய்
ஓட்டை

**ஔ**

ஔவை
ஔடதம்

**க**

கரி
கடி
கழி
கணு
கடை
கரை
கடல்
கதவு
கரம்
கட்டு
கயிறு
கம்பி
கத்தி
கன்று
கவலை
கழுதை
கருணை
கசப்பு
கடவுள்
கடிதம்
கட்டில்
கத்தரி
கம்பம்
கப்பல்
கணிதம்
கரும்பு
கறுப்பு
கரண்டி
கத்தும்
கண்ணீர்
கட்டளை
கழிவறை
கடிகாரம்
கடற்கரை
கட்டணம்
கத்தரிக்காய்

**கா**

கால்
காய்
காடு
காசு
காது
காலை
காளை
காகம்
காம்பு
காரம்
காலம்
காட்டு
காவல்
காளான்
காரணம்
காற்று
காய்கறி

**கி**

கிளி
கிளை
கிழவி
கிழமை
கிழக்கு
கிழங்கு

**கீ**

கீரி
கீழ்
கீரை
கீச்சிடும்

**கு**

குதி
குளி
குழி
குறி
குனி
குடை
குரை
குகை
குயில்
குச்சி
குஞ்சு
குட்டி
குண்டு
குட்டை
குதிரை
குவளை
குழாய்
குன்று
குப்பை
குறைவு
குமட்டி
குரங்கு
குருடன்
குளியல்
குற்றம்
குயவன்
குடும்பம்
குங்குமம்
குத்துவிளக்கு

**கூ**

கூடு
கூறு
கூவி
கூரை
கூடை
கூட்டு
கூவும்
கூண்டு
கூட்டம்

**கெ**

கெடு
கெண்டை
கெட்டவன்

**கே**

கேணி
கேசரி
கேள்வி
கேழ்வரகு

**கை**

கை
கைது
கைலி
கையெழுத்து

**கொ**

கொடி
கொடு
கொலை
கொக்கு
கொத்து
கொய்யா
கொள்ளை
கொண்டை
கொட்டாவி
கொக்கரிக்கும்

**கோ**

கோடு
கோழி
கோடை
கோடரி
கோபம்
கோயில்
கோழை
கோமாளி

**ச**

சளி
சனி
சபை
சதை
சடை
சமை
சட்டி
சந்து
சரம்
சங்கு
சங்கிலி
சட்டை
சமயம்
சந்தை
சண்டை
சத்தம்
சந்தனம்
சந்திரன்
சக்கரம்
சல்லடை

**சா**

சாய்
சாவி
சாறு
சாலை
சாணி
சாமம்
சாட்சி
சாட்டை
சாப்பிடு
சாம்பார்

**சி**

சிக்கு
சினம்
சித்தி
சிறுமி
சிங்கம்
சிட்டு
சிலர்
சிவன்
சிறகு
சிறிய
சிரிப்பு
சிவப்பு
சிறுவன்
சிற்றூர்
சிற்றப்பா
சிற்றுண்டி
சின்னம்மா
சிற்றுண்டிச்சாலை

**சீ**

சீப்பு
சீருடை
சீரகம்
சீக்கிரம்
சீத்தாப்பழம்

**சு**

சுகம்
சுக்கு
சுத்தம்
சுவைநீர்
சுண்டெலி
சுமையுந்து
சுண்ணாம்பு
சுண்டைக்காய்

**சூ**

சூடம்
சூரியன்

**செ**

செடி
செம்பு
செண்டு
செதில்
செய்தி
செயல்
செருப்பு
செய்யுள்
செம்பரத்தை

**சே**

சேர்
சேலை
சேவல்

**சை**

சைகை
சைவம்

**சொ**

சொறி
சொல்
சொட்டு
சொத்தை
சொந்தம்

**சோ**

சோறு
சோளம்
சோதனை

**ஞ**

ஞமலி

**ஞா**

ஞாயிறு
ஞாபகம்

**ட**

டப்பா
டமாரம்

**டு**

டுரியான்

**த**

தடி
தரை
தலை
தமிழ்
தம்பி
தயவு
தயிர்
தட்டு
தங்கை
தவணை
தகரம்
தந்தம்
தச்சன்
தங்கம்
தக்கை
தக்காளி
தண்ணீர்
தலைவன்
தலையணை
தமக்கை
தந்திரம்

**தா**

தாடி
தாய்
தாள்
தாகம்
தாண்டு
தாங்கு
தாளம்
தாத்தா
தாமரை
தாவணி

**தி**

திற
திரை
திசை
திடல்
திங்கள்
திட்டம்
திருடன்
திருநீறு
திரும்பு

**தீ**

தீ
தீனி
தீபம்
தீட்டு
தீங்கு
தீபாவளி

**து**

துடை
துணி
துவை
துளசி
துண்டு
துயரம்
துன்பம்
துலக்கு
தும்பிக்கை
துடைப்பம்

**தூ**

தூசு
தூள்
தூண்
தூய்மை
தூக்கம்
தூண்டில்

**தெ**

தென்னை

**தே**

தேன்
தேனீ
தேரை
தேதி
தேங்காய்
தேசியமொழி
தேசியகீதம்
தேசியக்கொடி

**தை**

தை
தையல்
தைலம்
தைரியம்

**தொ**

தொப்பி
தொட்டு
தொட்டி
தொப்புள்
தொண்டை

**தோ**

தோடு
தோல்
தோள்
தோசை
தோகை
தோல்வி
தோட்டம்

**ந**

நம்
நட
நரி
நடு
நகம்
நன்றி

நகை
நன்று
நச்சு
நண்டு
நத்தை
நகரம்
நடிப்பு
நரம்பு
நட்டம்
நல்லவன்
நட்சத்திரம்

**நா**

நாய்
நாடு
நான்
நாள்
நாகம்
நாக்கு
நான்கு

நாற்றம்
நாடகம்
நாற்காலி

**நி**

நிலா
நிறை
நிலம்
நிழல்
நிறம்
நிமிடம்

**நீ**

நீர்
நீலம்
நீளம்

**நு**

நுனி
நுரை

**நூ**

நூல்

**நெ**

நெல்
நெய்
நெற்றி
நெரிசல்
நெருப்பு

**நே**

நேர்
நேரம்
நேற்று

**நொ**

நொடி
நொண்டி

**நோ**

நோய்
நோட்டம்
நோக்கம்

**ப**

பசி
படி
பல்
படு
பலா
பசை
படம்
பட்டு
பயம்
பலம்
பலர்
பல்லி
பன்றி
பரிசு
பணம்
படகு
பஞ்சு
பச்சை
பலகை
பட்டம்
பள்ளம்
பட்டாசு
படைப்பு
பலகாரம்
பனிக்கூழ்
படிக்கட்டு
பள்ளிவாசல்
பள்ளிக்கூடம்

**பா**

பாய்
பாடு
பால்
பாறை
பாதை
பாக்கு
பாட்டி
பாரம்
பாம்பு
பாலம்
பாடம்
பாவாடை
பார்த்து
பாராட்டு
பாகற்காய்

**பி**

பின்
பிழை
பிறை
பிட்டு
பிஞ்சு
பிணம்
பிராணி
பிள்ளை
பிரம்பு
பிளிறும்

**பீ**

பீலி
பீளை

**பு**

புலி
புளி
புழு
புகை
புண்
புதன்

புயல்
புட்டி
புடவை
புளிப்பு
புத்திமதி
புத்தாடை

**பூ**

பூ
பூமி
பூசை
பூட்டு

**பெ**

பெண்
பெட்டி
பெட்டை
பெருமை
பென்சில்

**பே**

பேன்
பேனா
பேரன்
பேச்சு
பேர்த்தி
பேருந்து

**பை**

பை
பையன்
பைத்தியம்

**பொ**

பொன்
பொடி
பொரி
பொட்டு
பொருள்
பொறுமை
பொங்கல்

**போ**

போ
போட்டி
போதனை

**பௌ**

பௌர்ணமி

**ம**

மடி
மண்
மழை
மடம்
மதம்
மயில்
மரம்
மலிவு
மலர்
மணல்
மசூதி
மண்டை

மஞ்சள்
மத்தளம்
மருந்து
மன்னன்
மனிதன்
மல்லிகை
மத்தாப்பு

**மா**

மாவு
மான்
மாடி
மாமா
மாலை
மார்பு
மாணவி
மாநிலம்
மாணவன்
மாம்பழம்
மாணிக்கம்

**மி**

மிதி
மின்னல்
மிளகாய்
மிட்டாய்
மிதிவண்டி

**மீ**

மீன்
மீசை
மீதம்
மீனவர்

**மு**

முள்
முடி
முகம்
முடிவு
முயல்
முறம்
முத்து

முதுகு
முல்லை
முட்டை
முதலை
முடவன்
முயற்சி
முறுக்கு
முதியவர்
முள்ளங்கி

**மூ**

மூடி
மூலை
மூளை
மூவர்
மூச்சு
மூன்று
மூக்கு
மூட்டை

**மெ**

மெய்
மெல்ல
மெத்தை

**மே**

மேடு
மேலே
மேசை
மேகம்

**மை**

மை
மைனா

**மொ**

மொட்டு
மொச்சை
மொட்டை

**மோ**

மோர்
மோது
மோதிரம்
மோப்பம்

**மௌ**

மௌனம்

**யா**

யார்
யானை

**யோ**

யோசனை

**ர**

ரசம்
ரதம்
ரயில்
ரம்பம்
ரம்புத்தான்
ரவிக்கை

**ரா**

ராணி
ராகம்

**ரீ**

ரீங்காரம்

**ரு**

ருசி

**ரூ**

ரூபம்

**ரே**

ரேகை

**ரொ**

ரொட்டி

**ரோ**

ரோமம்

**ல**

லட்டு

**வ**

வடி
வலி
வலை
வரை
வடை
வலம்
வயது
வண்டு
வடம்
வயிறு
வரிசை
வளைவு
வடக்கு
வகுப்பு
வட்டம்
வழிபாடு
வணங்கு
வளையம்
வளையல்
வளர்ப்பு
வணக்கம்
வரவேற்பு

**வா**

வால்
வாய்
வாழை
வாரம்
வானம்
வாத்து
வாங்கு
வாகனம்
வாழ்த்து
வானவில்
வான்கோழி
வாருங்கள்
வாழைப்பழம்
வாழ்த்து அட்டை

**வி**

விழி
விழு
விதை
விடை
விலை
வினா
விரல்
விறகு
விசிறி
விளைவு
விரட்டு
விருந்து
விலங்கு
வியாழன்
விளக்கு
விடுமுறை
வியாபாரி
விருந்தினர்
விளையாட்டு

**வீ**

வீசு
வீடு
வீதி
வீண்
வீணை
வீச்சு
வீரன்
வீக்கம்

**வெ**

வெடி
வெள்ளி
வெட்டு
வெற்றி
வெயில்
வெள்ளை
வெளியே
வெறுப்பு
வெப்பம்
வெட்கம்
வெந்நீர்
வெண்ணெய்
வெளிச்சம்
வெங்காயம்
வெற்றிலை
வெண்கட்டி
வெள்ளரிக்காய்
வெண்டைக்காய்

**வே**

வேர்
வேலி
வேல்
வேலை
வேகம்
வேடன்
வேட்டை
வேண்டும்

**வை**

வைத்தியம்
வைத்தியர்

**வௌ**

வௌவால்

## PANEL PENGGUBAL

| | | |
|---|---|---|
| 1. | Ramanathan A/L Nagarathinam | Bahagian Pembangunan Kurikulum |
| 2. | Vanaja A/P Ratnam | Bahagian Pembangunan Kurikulum |
| 3. | Tamil Selvan A/L Perumal | Bahagian Buku Teks |
| 4. | Ananthan A/L Darman | Bahagian Teknologi Pendidikan |
| 5. | Uthamaseelan A/L Retnam | Bahagian Teknologi Pendidikan |
| 6. | Gunasekaran A/L Karapaya | Jemaah Nazir dan Jaminan Kualiti Negeri Selangor |
| 7. | Murthy A/L Parasuraman | Lembaga Peperiksaan |
| 8. | Prof. Madya. Dr. Sababathy A/L Venugopal, PhD | Universiti Malaya |
| 9. | Vijayan A/L Ramasamy | Jabatan Pendidikan Negeri Johor |
| 10. | Thamil Selvan A/L Perinan | Jabatan Pendidikan Negeri Kedah |
| 11. | Anantha Kumarl A/L A. Vellasamy | Jabatan Pendidikan Negeri Melaka |
| 12. | Chandrasegaran A/L Narasimaloo | Jabatan Pendidikan Negeri Perak |
| 13. | Sathianarayanan A/L Krishna Iyer | Jabatan Pendidikan Negeri Sembilan |
| 14. | Poobalan A/L Manickam | Jabatan Pendidikan Pahang |
| 15. | Muniandy A/L Kathan | Jabatan Pendidikan Pulau Pinang |

| | | |
|---|---|---|
| 16. | Sivalingam A/L P Seenivasan | Jabatan Pendidikan Wilayah Persekutuan Kuala Lumpur |
| 17. | Sevanesan A/L Raju | IPG Kampus Ipoh, Perak |
| 18. | Nagarajan A/L Muniandy | IPG Kampus Pulau Pinang, Pulau Pinang |
| 19. | K. Gunasekaran A/L M. Kandasamy | IPG Kampus Raja Melewar, Negeri Sembilan |
| 20. | Paneer Selvan A/L Anthony | IPG Kampus Sultan Abdul Halim, Kedah |
| 21. | Duraimuthu A/L Subramaniam | IPG Kampus Tengku Ampuan Afzan, Pahang |
| 22. | Saminathan A/L Govindasamy | IPG Kampus Tuanku Bainun, Pulau Pinang |
| 23. | Vengadammal A/P Rajoo | IPG Kampus Tuanku Bainun, Pulau Pinang |
| 24. | Shanti A/P Arul Dass | SJKT Ladang Bukit Jalil, Kuala Lumpur |
| 25. | Parvathy A/P Ponniah | SJKT Ladang Semenyih, Semenyih, Selangor |
| 26. | Jacinta A/P Lourdu | SJKT Perai, Perai, Pulau Pinang |
| 27. | Jeyah Piriyah A/P Kaniapan | SJKT Dato' Sithambaram Pillay, Teluk Intan, Perak |
| 28. | Gandhi Mathy A/P Kanan | SJKT Sungai Renggam, Shah Alam, Selangor |

## TURUT MENYUMBANG

| | | |
|---|---|---|
| 1. | Thana Balan A/L Narayanan | Bahagian Buku Teks |
| 2. | Mannar Mannan A/L Maruthai | Universiti Malaya |
| 3. | Dr. Samikkanu Jabamoney A/L Ishak Samuel, PhD | Universiti Pendidikan Sultan Idris |
| 4. | Dr. Paramasivam A/L Muthusamy, PhD | Universiti Putra Malaysia |
| 5. | Raman A/L Annamalai | Jabatan Pendidikan Negeri Selangor |
| 6. | Narayanasamy A/L Kuppusamy | IPG Kampus Raja Melewar, Negeri Sembilan (Pesara) |
| 7. | Govindaraju A/L Sinnasamy | SMK Dato’ Mohd. Taha, Gemencheh, Negeri Sembilan (Pesara) |
| 8. | Subramonian A/L Vadival | SMK Datuk Mohammad Yusof, Linggi, Negeri Sembilan (Pesara) |
| 9. | Balakrishnan A/L Munusamy | SMK Tunku Besar Tampin, Tampin, Negeri Sembilan (Pesara) |

## PENGHARGAAN


### Penasihat

| | | |
|---|---|---|
| Dr. Sariah binti Abd. Jalil | - | Pengarah |
| Shamsuri bin Sujak | - | Timbalan Pengarah |
| Datin Dr. Ng Soo Boon | - | Timbalan Pengarah |

### Penasihat Editorial

| | | |
|---|---|---|
| Dr. A'azmi bin Shahri | - | Ketua Sektor |
| Mohamed Zaki bin Abd. Ghani | - | Ketua Sektor |
| Haji Naza Idris bin Saadon | - | Ketua Sektor |
| Hajah Chetrilah binti Othman | - | Ketua Sektor |
| Zaidah binti Mohd. Yusof | - | Ketua Sektor |
| Mohd Faudzan bin Hamzah | - | Ketua Sektor |
| Dr. Rusilawati binti Othman | - | Ketua Sektor |
| Mohamed Salim bin Taufix Rashidi | - | Ketua Sektor |

ISBN 978-967-420-107-4

9 789674 201074

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia
Aras 4-8 Blok E9, Kompleks Kerajaan Parcel E
62604 Putrajaya
Tel: 03-8884 2000 Fax: 03-8888 9917
http://www.moe.gov.my/bpk